**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 2-ம் நாள்
2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் நாள் வெள்ளிக்கிழமை

******

**இடைமனு எண். 07/2025-ல் - அசல் வழக்கு எண். 31/2021**

S. அஜீம்தீன் .....மனுதாரர்/வாதி

...எதிராக...

1. சலாஹுதீன்
2. முசாஹுதீன்
3. பைரோஜ்பானு
4. பிர்தோஷ்கனி .... எதிர்மனுதாரர்கள்/ எதிர்வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 11.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S. சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்து கொடுத்துள்ளதை அனுசரித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணத்தை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை-7 விதி 14-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். 1-ம் எதிர்மனுதாரர்கள் மீது விளம்பல் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்குத்தொடர்ந்து

விசாரணைக்கு வந்து மனுதாரர் தரப்பு விசாரணை நடந்து வருகிறது. மனுதாரர் தரப்பில் குறியிட சில முக்கியமான ஆவணங்கள் இத்துடன் கொடுத்துள்ளேன். அவைகளை தாக்கல் செய்யவேண்டுமென்று தற்போது ஆலோசனை கிடைத்ததன் பேரில் தேடி எடுத்து வந்து தாக்கல் செய்கிறேன். மேற்படி இத்துடன் காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு வழங்க வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது. எனவே இத்துடன் தாக்கல் செய்யப்படும் ஆவணப்பட்டியலில் கண்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு வழங்ககோரி மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. எதிர்மனுதார் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

**5. <u>தீர்வு:</u>**

(i) மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்குத் தொடர்ந்து விசாரணைக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர் தரப்பில் குறியிட சில முக்கியமான ஆவணங்கள் தாக்கல் செய்யவேண்டுமென்று தற்போது ஆலோசனை கிடைத்தன் பேரில் தேடி எடுத்து வந்து தாக்கல் செய்கிறேன் என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ அவைகளை முன்பே தாக்கல் செய்யாமலிருக்கவில்லை என்றும் வாதிடப்பட்டது.

(ii) மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 18–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> | – இல்லை – |

(ஒம்/– M.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.07/2025–ல்
அசல் வழக்கு எண்.31/2021
நாள்.18.07.2025.